இணைப்பு III.

[437ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 397—க்கான விடையைக் காண்க]

வீட்டு வாடகைப்படி அரசு ஊழியர்கள் பணியாற்றும் இடங்களுக்கேற்றாற் போல் பல்வேறு விகிதங்களில் அரசு ஆணையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. எங்கெங்கு அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படுகிறதோ அவ்விடங்களில் பணிபுரியும் எல்லா ஆசிரியர்களுக்கும் அதே விகிதத்தில் வீட்டு வாடகைப்படி வழங்கப்படுகிறது.

8-2-1971-ம் நாளிட்ட அரசு நிதித் துறை ஆணை எண். 224-ல் கண்ட இரண்டாவது ஊதியக்குழு பரிந்துரையின்படி திருத்தப்பட்ட விகிதங்களில் அரசு ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படுகிறது. இதே விகிதத்தில், உள்ளாட்சித் துறை மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி வழங்கப்படுகிறது.

தற்போது வழங்கப்படும் வீட்டு வாடகைப்படியின் விவரம் பின் வருமாறு:—

(1) கிரேடு (ஏ) சென்னை நகரம் மற்றும் 32 கிலோ மீட்டர்களுக்குட்பட்ட நகர்ப் பகுதிகள்.	எல்லா அரசு ஊழியர்களுக்கும்.	ஊதியத்தில் 15 சதவீதம் அதிகப்பட்சம் ரூ. 300 (ஒரு மாதத்திற்கு).
(2) கிரேடு I (பி) மதுரை மற்றும் கோயம்புத்தூர் (மற்றும் 16 கி. மீட்டர்களுக்குட்பட்ட பகுதிகள்)	ஊதியம் ரூ. 1,000க்கு மேற்படாதவர்கள்.	ஊதியத்தில் 10 சதவீதம்.
(3) கிரேடு II நகராட்சிகள், மற்றும் மாவட்ட தலைமையகங்கள்.	ஊதியம் ரூ. 1,000க்கு மேற்படாதவர்கள்.	ஊதியத்தில் 8 சதவீதம்.
(4) கிரேடு III நகராட்சி மற்றும் வட்டத் தலைமையகங்கள் அல்லாத கோட்டாட்சித் தலைமையகங்கள், ஏனைய நகராட்சிகள் மற்றும் வட்டத் தலைமையகங்கள்.	ஊதியம் ரூ. 500க்கு மேற்படாதவர்கள்.	ஊதியத்தில் 5 சதவீதம் குறைந்தபட்சம் ரூ. 10.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS